ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/55 - 2019 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2019.10.04

*2143/55 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: கடு/காணி/03/154/எல்ஆர்ரீபி /ii.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/10/2019/எல்ஆர்ரீ /65

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கும் காணியின் விபரம்:-**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கடுவலை பிரதேச செயலாளர் பிரிவில், கெடகயே கோரளை சிறு பிரிவில் இல. 477, தலங்கமை வடக்கு ஏ, கொஸ்வத்த கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட தலங்கமை வடக்கு மற்றும் மாலம்பே கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இலக்கம் 9855 எனக் காட்டப்பட்டுள்ள கீழே விபரிக்கப்படும் காணித் துண்டுகள்.

*01.* **துண்டுஇல. 01**
காணியின் பெயர்: தலங்கமவத்தை; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: டி.ஆர்.யு.ரத்னவீர, இல.562, நாவல வீதி, ராஜகிரிய; விஸ்தீரணம்: 0.0393 ஹெக்டயார்.

*02.* **துண்டுஇல. 02**
காணியின் பெயர்: தலங்கமவத்தை; விபரம்: தோட்டம்; ; உரிமை கோருவோர்: பி.கே.எஸ்.பெரேரா, இல.368/ 2, கொஸ்வத்தை, தலங்கம; விஸ்தீரணம்: 0.0078 ஹெக்டயார்.

*03.* **துண்டுஇல. 03**
காணியின் பெயர்: தலங்கமவத்தை; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு கடுவெல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ.வை.டி. ஆனந்தனி,
பிரதேச செயலாளர்,
கடுவெல.

பிரதேச செயலகம்,
2019, ஒற்றோபர் 04,
கடுவெல.

*10 - 655*



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.